[9th August 1966

கனம் திரு. வெ. ராமைய்யா : மொத்தம் எவ்வளவு அனும திக்கப்பட்டது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனல் இந்த வேலைகள் நிர்ணயிக்கப்பட்ட முறைப்படித்தான் நடந்துகொண்டிருக்கின்றன.

நாங்குநேரி தாலூகா

* 274 கேள்வி.—திரு. எ. சுவாமிதாஸ் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) நாங்குநேரி தாலுகாவை கன்னியாகுமரி மாவட்டத்துடன் இணைக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

(இ) ஆமெனில், எப்போது இணைப்பு ஏற்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

அரசாங்க பஸ்களால் விபத்துகள்

* 275 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) 1964-65-ல் சென்னை நகரத்தில் ஓடும் அரசாங்க பஸ்களில் அடிபட்டவர்கள், காயம் பட்டு இறந்தவர்கள் முறையே எத்தனை பேர்கள் ?

(இ) இறந்தவர்கள், காயம் அடைந்தவர்கள் யாருக்கேனும் நஷ்டஈடு கொடுக்கப்பட்டுள்ளதா ? ஆமெனில் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Number of persons injured—265. Number of persons injured and died—18.

(*b*) Yes. Compensation has been paid in 13 cases. The total amount paid is Rs. 37,940.57.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதற்குக் காரணம் அரசாங்க பஸ்களை வேகமாக ஓட்டுவது தான் என்று புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா ? வேகமாக ஓட்டுவதைக் கொஞ்சம் மெதுவாக ஓட்டும்படி சர்க்கார் சிபார்சு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : வேகமாக ஓட்டுவது மட்டும் காரணமாக இருக்க முடியாது. வேறுபல காரணங்கள் இருக்கின்றன.

Food poisoning

* 276 *Q.*—SRI V. SANKARAN :
SRI T. P. ALAGAMUTHU :
SRI A. K. SUBBIAH :
SRI M. KARUNANITHI :
} Will the Hon. the Minister for Public Health be pleased to state—